செய்தி வெளியீடு எண்.09-2020 நாள்: 06.08.2020

**விழுப்புரம் மாவட்டம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பாக கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் சுகாதாரத்துறை செயலர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

விழுப்புரம் மாவட்டம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பாக கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் சுகாதாரத்துறை செயலர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (06.08.2020) நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை குறித்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மற்றும் சுகாதாரத்துறை மருத்துவர்களிடம் விரிவாக ஆய்வு மேற்கொண்டார். நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற மக்களுக்கு கொரோனா வைரஸ் நோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திட மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் உள்ளாட்சித்துறையினரை ஈடுபடுத்தி முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளி கடைபிடிப்பது உள்ளிட்டவைகளின் அவசியம் குறித்து விரிவாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். மேலும், கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளில் ஈடுபடும் அரசு மருத்துவர்கள் மற்றும் அரசு பணியாளர்கள் விழிப்புணர்வுடன் சமூக இடைவெளியை கடைபிடித்து முகக்கவசம் அணிந்து பாதுகாப்பான முறையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என சுதாரத்துறை செயலர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன்.இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து சுகாதாரத்துறை செயலர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன்.இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதால் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் கொரோனா வைரஸ் நோய் தொற்றின் தாக்கம் குறைந்து காணப்படுகிறது. மேலும், கொரோனா வைரஸ் நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைப்பெற்று குணமடைந்து வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருகிறது. தொடர்ந்து கொரோனா நோய் தொற்றின் காரணமாக இறப்பு விகிதத்தை குறைக்க 12 வகையான மருத்தவ ஆலோசனைகள் மருத்துவ குழு நிபுணர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், அரசு மருத்துவமனைகள் மற்றும் சிறப்பு முகாம்கள் மூலமாக கொரோனா பரிசோதனை மேற்கொள்ளும் மருத்துவ குழுவினர் பாதுகாப்புடன் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். மேலும், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சுவாசக்கருவிகள், உயர் சிகிச்சை கருவிகள் மற்றும் படுக்கை

வசதிகள் சிறப்பான வகையில் மருத்துவமனையில் செய்யப்பட்டுள்ளது. உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் மற்றும் அதீத சுவாசப்பிரச்சினை கொண்ட நோயாளிகளுக்கென தனியாக சுழற்சி முறையில் செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பிரசவம், இதய அறுவை சிகிச்சை, நீரிழிவு நோய் உள்ளிட்ட சிகிச்சைகள் எவ்வித தொய்விமின்றி மருத்துவர்கள் சிறப்பான முறையில் சிகிச்சை மேற்கொண்டுவருகின்றனர், இ - சஞ்சீவி திட்டத்தின் மூலம் இணைய வழியாக 25,000-க்கும் மேற்பட்ட நபர்கள் மருத்துவ ஆலோசனை பெற்று பயனடைந்துள்ளனர். கொரோனா வைரஸ் நோய் குறித்து குறுஞ்செயலி வாயிலாக வரும் வதந்திகளை பொதுமக்கள் எவரும் நம்ப வேண்டாம். உரிய மருத்துவர்களை அணுகி உண்மைத்தன்மை அறிந்துகொள்ள வேண்டும் என சுகாதாரத்துறை செயலர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன்.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.குந்தவிதேவி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.செந்தில்குமார், அரசு மருத்துவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.**